மாக்கோலமாய் விளைந்த

மதி விருந்து

★

இயற்றியவர்

G. V. வேதாத்திரி

★

வெளியிட்டவர்கள்

நண்பர்கள்

கிடைக்குமிடம் :

அன்பொளி நிலையம்

கூடுவாஞ்சேரி. S.I.

விலை அணு 4

வெளி வந்துவிட்டது !

G. V. வேதாத்திரி

அவர்களால் எழுதப்பட்ட

உலக சமாதானம்

என்ற

உயரிய ஆராய்ச்சி நூல்

வெளி வந்துவிட்டது.

விலை ரூ. 5.

ரூ. 5. முன்பணம் அனுப்பி தபால் செலவில்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

●

விலாசம் :

ஆசிரியர் " அன்பொளி "

அன்பொளி நிலையம்

கூடுவாஞ்சேரி. S.I.

பதிப்புரை

சென்ற நான்கு ஆண்டுகளாக, ஒவ்வொரு மார்கழி மாதமும், எமது நண்பர், கூடுவாஞ்சேரி. வ. வேதாத்திரி அவர்கள், தமது மனைவியார், அதி காலையில் மாக்கோல மிட்டு முடிந்த பின்பு, அதைச் சுற்றி எழுதுதற்கு, சில பாட்டுகள் தந்து உதவுவார்கள். அதைத் தினமும் காணும் பேறுபெற்ற நாங்கள் இவைகளைக் குறித்து வைத்துக் கொண்டதோடு, அவைகளில் செறிந்துள்ள பொருள் ஆழமும், உலகாதாய ஞானமும் மக்கள் யாவருக்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு, இதை ஓர் நாள் அவரிடம் தெரிவித்து இவைகளைத் தொகுத்து வெளியிடுவதற்கு அனுமதிக் கோரினோம், அவர் இதற்கு இசைந்ததோடு, முன்னுரையாக இரண்டு செய்யுட்கள் தந்து உதவியதற்கு, எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, முதல் மூன்று வருடங்களின் செய்யுட்களைச் சேர்த்து முதல்பதிப்பு வெளியிட்டோம் இப்போது அடுத்து வந்த வருடத்திய செய்யுள்களையும் சேர்த்து 2-ம் பதிப்பாக வெளியிட்டு இப் புத்தகத்தை மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கின்றோம்.

A. சோக்கலிங்கம்
P. T. குமாரசுவாமி
C. P. நடேசன்
M. S. பாலசுப்பிரமணியம்

கூடுவாஞ்சேரி,
1—4—'57

முன்னுரை

மார்கழி மாதங்களிலே என் துணைவி,
மாக்கோலம் தெருவில் அதிகாலை யிட்டு,
ஆர்வமுடன் எனைநோக்கி, அகம் பூரித்து,
அக் கோலத்தைச் சுற்றி எழுதுதற்கு
ஓர் பாட்டு சொல்லும் என்பாள், அந்நேரத்தில் [ன்
உதிக்கும் சில சொற்றொடர்கள் எடுத்துச் சொல்வே
ஊர்ந்து செல்லும் அவளின்கை விரல்கள், மாவை
உதிர்த்து எழுத்தாய் மாற்றும், பலர் காண்பார்கள்.

அன்றன்று இந்தவிதம் தோற்றமான,
அனுபவ ஆராய்ச்சிகளின் குறிப்பனைத்தும்,
ஒன்றொன்றின் உட்கருத்தைத் தர்க்கம் செய்து,
ஒத்துணர்ந்து, உயரிய நன்னோக்கத்தோடு,
என்றென்றும் பலர் படிக்க உதவும் என்று
எண்ணி, எழுதித் தொகுத்து, அச்சிலிட்டு,
இன்று, இப்போ, நாம் கண்டு ஆனந்திக்க,
இதைத் தந்த நண்பர்களுக் கெனது நன்றி,

கூடுவாஞ்சேரி,
1—4—'57

G. V. வேதாத்திரி.

மாக்கோலமாய் விளைந்த

மதி விருந்து

1953

16-12-53

கடவுளை வணங்கும் போது,
கருத்தினை உற்றுப் பார் நீ!
கடவுளாய்க் கருத்தே நிற்கும்
காட்சியைக் காண்பாய் அங்கே.

17-12-53

அறிவின் இருப்பிடம், இயல்பு, இயக்கம்
அறிந்து, ஒழுகுவோர் அறிஞர்கள் ஆவார்.

18-12-53

உருவ நிலையில் கொண்ட தொடர்பால்,
உதிக்கும் இச்சையே பாசம்,
உள நிலையறிந்து, உயர்ந்த அறிவில்,
உதிக்கும் ஆர்வமே, அன்பு.

19-12-53

அறிவு கட்டுண்டு செயல் விளைவிக்கும்,
விளைவறியாதது பாசம்,
அறிவின் அசையா உறுதியில் சுரக்கும்,
விளைவையும் அறியும், அன்பு.

20-12-53

எண்ணம் சொல் செயலால்
எவருக்கும், எப்போதும்,
நன்மையே விளைவிக்க,
நாட்டமா யிரு.

21-12-53

உள்ளொன்று வைத்து,
புறம் ஒன்று பேசினல்,
உள்ளொளித் தீயாகி,
உடலைக் கெடுத்திடும்.

22-12-53

அறிவை உணர்ச்சி வெல்லுவது இயல்பு,
அறிவால் உணர்ச்சியை வெல்லுவது உயர்வு.

23-12-53

ஆக்கத் துறையில் அறிவைச் செலுத்து,
ஊக்கமுடன் உழை, உயர்வு நிச்சயம்.

24-12-53

உழைப்பினல், உடலும், உள்ளமும்,
உலகமும், பயன் பெறும் உணர்வீர்.

25-12-53

உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய்,
நினைப்பதும், செய்வதும், நித்தியக்கடன்.

26-12-53

இயற்கைச் சக்தியே விதி,
இதை யறிந்த அளவே மதி.

27-12-53

எண்ணத்தின் வேகமும், இயல்பும், அறிந்தோர்க்கு
எண்ணமே இன்பமயம். எண்ணம் அமைதி பெறும்.

28-12-53

உண்ணும் உணவு
உனக்குக் கிடைத்தவகை,
எண்ணி யுண்ணிடல்
என்றும் உன்கடன்.

29-12-53

உணவிலே உலக ஒற்றுமைக் கண்டிடு,
உழைப்பினல் பதில் உலகுக்குத் தந்திடு.

30-12-53

உடையில் ஒழுக்கம், உள்ளத்தில் கருணை,
நடையில் கண்ணியம், நல்லோர் பண்பு.

31-12-53

கள்ளம், சோரம், கடன், குடி, பெரும்பாலும்
மெள்ள அதிகரிக்கும், விஷமொக்கும் இயல்புடைத்து,
உள்ள சுகம் போக்கும், உயிரையும் பலிகொள்ளும்,
கிள்ளி எறிவோம், கிளைக்கும் போதே இவற்றை.

நினைவை யடக்க நினைத்தால், அலையும்,
நினைவை யறிய நினைத்தால், ஒடுங்கும்.

———

1954

1-1-54

எண்ணமே எக்காலத்திற்கும்,
வாழ்க்கையின் சிற்பி,
எண்ணி எண்ணிட
இனிதே பயக்கும்.

2-1-54

உண்மையில் எதிரி
உனக்கு உண்டு எனில்,
உள்ளத்தி லெழும்
ஒழுங்கற்ற எண்ணமே.

3-1-54

உணவில் எளிமை,
உழைப்பில் கடுமை,
ஒழுக்கத்தில் உயர்வு,
உத்தமர் இயல்பு.

4-1-54

அறிவு, சுகம், பொருள்,
அரசியல், விஞ்ஞானம்
ஐந்து தத்துவங்கள்
அறிந்தவன் பெரியோன்.

5-1-54

அணுவாகி, அணுக்களிணைந்து
அண்டசராசரங்களாகி
அறிவாகி, அணுவறிந்த
அப்பொருளே பரம் ஆகும்.

6-1-54

அவனில் அணு, அணுவில் அவன்
உன்னில் எல்லாம் உன்னை, நீ! அறி.

7-1-54

பெண் வயிற்றி லுருவாகிப்
பெண் பாலுண்டே வளர்ந்தாய்
பெண் துணையால் வாழ்கின்றாய்
பெண்ணின் பெருமை உணர்,

8-1-54

எண்ணத்தின் சக்தி
இயல்பு அறிந்திடில்,
எண்ணம் பிறக்கும்
இடமும் விளங்கும்.

9-1-54

மண்மீது பெண் துணையால்
பொன் கொண்டே வாழ்கின்றோம்,
மாற்றுவதேன் மூவாசை
மதியுடனே பயன் கொள்வோம்

10-1-54

நெய்யும் தொழிலுக்கு
நிகரில்லை, நெய்பவர்,
நெசவில் நேர்மையைக்
கடைப் பிடித்தால்.

11-1-54

அண்டமனைத்தும் ஓர்
அடியால் அளக்கலாம்,
அணுக்குள், அடக்கலாம், அவ்
அறிவின் அளவையறி.

12-1-54

எண்ணு, சொல், செய்
எல்லோர்க்கும் நன்மை தர,
எண்ணும்படி செய்,
செய்யும்படி எண்ணு.

13-1-54

எண்ணியவெல்லாம்
எண்ணியபடியே யாகும்,
எண்ணத்தில், உறுதியும்,
ஒழுங்கும், அமைந்திடில்.

14-1-54

பொங்குகப் பொங்குக
பூரித்து உள்ளமெலாம்
எங்கும் நிறைந்த நம்
ஏகாந்த நிலையறிந்து.

16-12-54

கடமை யணர்ந்து அதைச் செயலில்
காட்டுபவன் தியாகியாம்,
கடவுளே மனிதனென
கருத்தறிந்தோன் ஞானியாம்.

17-12-54

கடமையை உணர்ந்தோர்,
கடவுளை நாடுவார்
கடவுளை அறிந்தோர்
கடமையில் வாழுவார்,

18-12-54

இயற்கையை அறிந்து ஒத்து
எண்ணுபவர் எண்ணம்
எப்போதும் எவ்விடத்தும்
கவலையாய் மாறாது.

19-12-54

அறிவின் சலனமே காமமாதி அறுகுணங்கள்
ஆழ்ந்து ஆராய்ந்து, அறிந்தவிடம் நிற்குணம்.

20-12-54

வாங்கும் கடனும், தேங்கும் பணமும்
வளர, வளர வாழ்வைக் கெடுக்கும்.

21-12-54

எண்ணம், சொல், செயலில்
எழும் விளைவறிந்திடு,
உண்மையில் இன்பமே
உண்டெனில் ஒழுக்கமாம்.

22-12-54

அனைத்துயிரும் ஒன்றென்று
அறிந்த அடிப்படையில்
ஆற்றும் கடமையெல்லாம்
அன்பின் செயலாகும்.

23-12-54

இன்பத்தை முறையோடு
அளவுடன் அனுபவிக்கத்
துன்பமேப் பெரும்பாலும் தோன்றாது
ஆய்ந்துணர்வீர்.

24-12-54

உம் மதமே உலகத்தில்
உயர் வென்று பேசுகிறீர்
எம் மதத்தாரிடம் இல்லை
ஏழ்மை. பஞ்ச பாதகங்கள் ?

25-12-54

உருவங்கள் கோடானக் கோடியாய், அவை
யுள்ளும் புறமும் அரூபமாய்,
ஊடுருவி நிறைந்தியங்கும் ஒருசக்தி,
உயிராகும், இயற்கையாகும் கடவுளாகும்.

26-12-54

அண்டத்தில் கடவுளாய்
அழைக்கப் படுபவன்
பிண்டத்தில் உயிரெனப்
பேசப் படுகிறான்
கண்டத்தின் மேலேக்
கருவில் நிலைத்தவன்
அண்டத்தும் பிண்டத்தும்
அவனையேக் காண்கின்றான்.

27-12-54

எண்ணம் தானாக எழுந்து அலையாமல்,
எண்ணத்தில் எண்ணமாய் இருப்பதே யோகம்.

28-12-54

புள்ளியே எழுத்துக்களுக் கெல்லாம் மூலம்,
பூதம் ஐந்துக்கும் மூலம் வெளி.
ஒலிக் கெல்லாம் மூலம் ஓங்காரம்,
ஒளிக் கெல்லாம் மூலம் இருள்.

29-12-54

தன் வியாசம் பூரணமாய்த்
தானறிந்த அறிவாளி,
சன்யாசம் அடைந்தோனும்,
சத்து, சித்து ஆனந்தன்.

30-12-54

கண்ணாடிப் பார்க்கக் காணலாம் உருவநிலை,
உண்ணாடிப் பார்க்க உணரலாம் உயிர் நிலையை.

31-12-54

கண்ணுக்கு தூரம் கணக்கிடலாம்,
கருவியினால் மேன்மேலும் விரித்திடலாம்,
உண்ணுக்கு தூரம் ஒருபுள்ளிக்குள் எனினும்,
உபமானத்தா லளவை உணர்த்த முடியாது.

1955

1-1-55

உடல், குடும்பம், பந்து, ஊரார்,
உலகோர்க் காற்றும்
கடமை, முறையே முக்கியம்,
கெடாமலும் பார், ஒன்றினுல் மற்று.

2-1-55

சிந்தனையுடன் செயலும், செயலுடன் சிந்தனையும்,
பந்தித்து நிற்கப் பழகுதலே நற்பண்பு.

3-1-55

இன்பத்தும், துன்பத்தும், யதார்த்தமும் கற்பனையும்,
சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்,

4-1-55

ஆழ்கடல்போல் பிரம்மம்
அலைகள் போல் உருவனைத்தும்,
ஊழூழி நிற்பதுவும்
உருவெடுத்து மாறுவதும்.

5-1-55

வித்தன்றி புல் பூண்டும்
வித விதமாம் உயிரினங்கள்,
சுத்த சுயமாயும்
தோற்றும் வகையறிந்தால்,
வித்தோ, மரமோ, எது முந்தி என்று
விளக்கமும் பெற்ற வித்தகனுவார்.

6-1-55

ஓங்கார நிலையினிலே "மௌனம்" என்போம்
உச்சரிப்பில் அதனையேச் "சப்தம்" என்போம்
"ஓம்" என்று செபிப்பவனை "பக்தன்" என்போம்
உட் பொருள் உணர்ந்தவனை "ஞானி" என்போம்.

7-1-55

ஓம் என்று உச்சரிக்க
ஒன்றிரண்டாய் விட்டதாங்கே.
ஓம் அதற்கு மூல ஒலியே
பிரணவமாம்.

8-1-55

செயல் விளைவை அனுபவித்து
சிந்தித்தக் குறிப்புகளேப்
பயனுள்ள பலமத நூல்
பண்படுத்தும் பக்தர்களை.

9-1-55

காமதேனு என்பதுவும்
கற்பகம், சிந்தாமணியும்,
நாம விளக்கம் காணில்
நமதறிவின் மூன்று நிலை.

10-1-55

தேகசுகம், அறிவு, செல்வம்,
ச்ந்தற்பம், சூழ்நிலைகள்,
வேகமுடன் மாறிவரும்,
ஒன்றை ஒன்று மோதவும் கூடும்.

11-1-55

செயல் வேகம் கொண்டவனே
சித்தன் ; சிந்தனையிலும்
புயல் வேகம் கொண்டெழுத்தில்
பொறித்தான் பலகலைகள்.

12-1-55

கடமையை உணர்ந்திடுக்
காலத்தில் செய்திடு,
உடம்புக்கும் நல்லது,
உள்ளமும் அமைதியாம்.

13-1-55

விண்ணிலும் மண்ணிலும்
வியாபக மான நீ,
எண்ணத்தில் நிறைந்திடு,
செய்கையில் சிறந்திடு.

14-1-55

அருவமே உருவமாய் ஆதியே அறிவாய்,
அறிவே குணங்களாய், அனுபவம் ஒழுக்கமாய்,
இருளே வெளிச்சமாய், இன்பமேத் துன்பமாய்,
மௌனமே சப்தமாய், மாறியது அறிவீர்.

16-12-55

குல முதலாய் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி,
பலரும்கூடி உழைத்து, பகிர்ந்துண்டு வாழ்ந்திடுவோம்,
உலகில் பிறந்துவிட்ட ஒவ்வோர் மனிதனுக்கும்,
நிலஉலகம் சொந்தம் என்ற நீதிநிலை நாட்டிடுவோம்.

17-12-55

அணுவில் அமைந்துள்ள
சட்டங்கள் விதியாகும்,
அறிவாய் அனுபவிக்கும்
ஆற்றலே மதியாகும்.

18-12-55

இயற்கைச் சட்டமாயிருக்கும்
ஈர்ப்பு என்னும் விதி, மதியாய்,
செயற்கைச் சட்டங்கள் பலவும்
செய்த சித்து ஆய்ந்தறிவீர்.

19-12-55

பெற்றப் பிள்ளைகளை வளர்க்கும்
பெரும் பாரமும், சமைக்கும்,
மற்றப் பொறுப்பும், குறைத்து
மாதர்களை உய்விக்க,
உற்ற விதம், ஆட்சிமுறை
உலகோர் கூடி வகுத்து,
பற்றற்று வாழும் பண்பே
அறிவின் சிகரம்.

20-12-55

இயக்கங்களுக்கு எல்லாம்
ஈர்ப்புத் தத்துவம் மூலம்,
பயத்துக் கெல்லாம் மூலம்
பாசமும் பற்றும்.

21-12-55

உடல், பொருள், அறிவு,
உலகம், அறிந்தோன் சொன்ன
உடை, எண்ணம், வாழ்க்கை,
ஒழுக்கங்களே, வேதம்.

22-12-55

இயற்கையால் விளைத்துன்பங்கள் போக்கிட,
முயற்சித்து, அணுமுதலண்டங்கள் நிலைகண்டான்,
பயிற்சியால் புவி வாழ்வை மேலாக்கிட,
செயற்கைப் பொருள்பல, செய்தான் மனிதனே.

23-12-55

ஆண், பெண் நட்பில் ஒழுக்கம்
அமைத்து அன்பாய் வாழ்வோம்.
ஊண், வீடு, உடை, உழைப்பு
உலகப் பொது ஆக்கிடுவோம்.

24-12-55

ஈர்ப்பு எனும் சக்தி எழுமிடம் அணுவாகும்,
இயங்குமிடம் அண்ட, பிண்ட, சராசரம்,
எண்ணம், ஈர்ப்பு எனும் இயற்கையின் உச்சநிலை,
எண்ணத்தினுள்ளே எல்லாம் அடங்கிடும்.

25-12-55

மண்ணேப் பானையாய் இருப்பது போலவே,
எண்ணமாய் இருப்பது இயற்கையே ஆகும்,
விண்ணே மண்ணுனுற்போல் விதிமதியாய்மாறிடினும்
மண்ணில் விண் அடக்கம்போல் மதியினிலேவிதியுளது

26-12-55

இயற்கை என்று சொல்லுகின்ற
ஈர்ப்பு சக்தி தத்துவத்தை,
இதுவரையில் அறிந்தோர்கள்
இப்புவியில் எத்தனைப்பேர்
சிந்தனையால் ஈர்ப்பு சக்தி
சிறப்பு விளக்கம் பெற்றால்,
சந்திரலோகம் போகும்
சபலபுத்தி மாறிவிடும்.

27-12-55

கண்டபடி ஊண்மாற்றி
காலம் தவறி யுண்ணல்,
அண்டையிலேப் பசித்தோர் முன்னும்
அளவுமீறியும் (உணவு) கொள்ளல்
உண்ட உடன் வாலிபர்கள்,
இரவில் உறங்கல் இவைகள்,
கொண்டுவரும் குன்மம் என்ற
கொடிய வயிற்றுப்புண் நோய்.

28-12-55

பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு இதை
மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை.

29-12-55

கண்ணும், ஒளியும், காண்பவனும்
ஒன்றேபோல்,
எண்ணம், இயற்கை, ஈசன்,
எனும் மூன்றும் ஒன்றாகும்

30-12-55

" அத்துவிதம் " " துவிதம் " என்றால்,
ஆதி அறிவானதுவே,
வித்துமரம் ஆனாற் போல்,
வேகம் நுட்பமாயுளது.

31-12-55

நினைப்பும் மறப்பும் அற்று இருக்க,
நீ, பழகிக்கொள், புலன்கள்
அனைத்தும் அடிமையாம்,
அமைதி கிட்டிடும் ஆங்கே,
ஒன்றையும் நினையாது,
உன்னையும் மறவாது,
நின்ற நிலையே அது,
நீயறி நினைவை நிறுத்தி.

1956

1-1-56

மாசற்ற ஒளிஊடே, மறைந்திருக்கும் இருள்போல,
ஈசன் அறிவில் இருக்கும் நிலே.

2-1-56

கதிரவன் காலத்தே காணுத விண்மீன் போல்
புதிர்போன்ற அறிவுநிலே புலன் இயங்குங்கால்,
[தோன்ரு

3-1-56

ஆண், பெண் தத்துவம்
அற்றும், உள உயிரினங்கள்
தோன்றுவது கூட்டணுக்கள்
சூடு, காற்று, நீர் எனும் நிலேயில் சுழன்று.

4-1-56

அழகு மாறிக்கொண்டே இருக்கும்,
அன்பு ஊறிக்கொண்டே இருக்கும்,
தொழுகைத் தூய்மையை வளர்க்கும்,
தோல்வி ஜெயத்தில் முடியும்.

5-1-56

பணத்தைக் கொடுப்பவன்
கடவுளே என்கிறீர்,
படைத்தவன் மனிதனே,
கொடுப்பவன் கடவுளோ?

6-1-56

உலகம், அண்டங்கள்,
உயிரினங்கள், பொருள்கள்,
பலதும் அணுவின் கூட்டுப்
பக்குவப் பரிணாமம்,
பகுத்தறிந்தால், ஒன்றி, ஒன்றிப்
பார்ப்பவனே, ஒலி முதலாய்
பஞ்சதத்துவம், ஈர்ப்பு,
பரம், அணு இவையாவான்.

7-1-56

வேமாய் இருப்பதை விதி என்போம்,
சிவம் என்போம், இயற்கை என்போம்,
வேகத்தில் நுட்பமும் கூடியபின் அதை
விவேகம் என்போம், மதி என்போம்,
வேறு வேறு அல்ல.

8-1-56

நீர் இல்லாவிட்டால் நிழல் இல்லை,
என்று சொல்வேன்
நீங்கள் சொல்வது தவறு
என்பீர், நிச்சயமே!
நீர்வித்தில் ஊறி, உறைந்து
நீண்டு, மரமாகிறது,
நீர்வானில் மேகம், நீர் உறைந்தப்
பக்குவமே நிலம்.

9-1-56

என்றென்றும் மாறாத, அளப்பறிய,
உவமையிலா, இயற்கை வேகம்,
அன்றன்றும் வாழ்க்கையிலே ஞாபகமாய்
அனுபவிப்பான் அறிவறிந்தோன்.

10-1-56

உறக்கம், உழைப்பு, உடை, உணவு
இவைகளில் எவற்றையும்,
மறுப்பதும், மிகுப்பதும், மனித உடலின் மகத்துவம்
அறியாதோர் செய்கையாம்.

11-1-56

ஆக்கமும், அழிவும்,
அணுக்கள் கூடுதல் பிரிதலே.
நீக்கமற நிறைந்தவனின்,
நினைக்கும் ரசிக்கும் நிலை அறிவு.

12-1-56

மனிதனின் மகத்துவம் மனிதன்
அறியாத மயக்கத்தின் விளைவு,
மனிதனின் வாழ்க்கையை
மனிதன் பறிக்கிறான்,
மதியின் உயர்வும்,
நுட்பமும் பெற்றவன்,
மண்ணுலகில் இந்த மாசு
ஒழிக்க முயல்கிறான்.

13-1-56

நீயார் ? எனக் கேட்டால் விழிக்கிறாய்,
நிச்சயப் படுத்துகிறாய் கடவுள்நிலை யதனை,
வாயால் வரும் சப்தம் எங்குளது ? எவ்வளவு ?
வகையறிந்தால் அங்கே வாதியே, நீதிபதி.

14-1-56

இன்றுள்ள சாதி, மத, மொழி,
இன, தேச, பேதங்கள் போக்கி,
என்றும், எங்கும், எவரும்,
இன்பமாய் வாழ்வதற் கேற்ப,
ஒன்றுபட்டு உலகோர் அனைவரும் கூடி,
ஒரே ஆட்சி காண்பாரோ,
அன்றே,ஆதி அறிவின் பூரணத்தில்,
பொங்கும் நாள் ஆகும்.

15-12-56

குறி தவறி துப்பாக்கி வெடிப்பதை ஒக்கும்,
நெறி தவறி செய்யும் செயலின் விளைவு.

16-12-56

உருவம் வரைக்கும் குறுகிநின்ற
உணர்ச்சி நிலையே நர—அகமாம்.
அருவ மென்னும் பேரண்டம்
அறிந்த நிலையே சுவர்—அகமாம்.
விண் என்ற அணுவறிந்தோன்
விண்ணவனும். ஆராய்ந்து
விண்கடந்து, வான் அறிந்த
விவேகியே வானவனும்.

17-12-56

அலையலையாய் பெருக் கெடுக்கும்
அறிவு வெள்ளம் பயன் படுத்தித்
தலையாய நம் சக்தித் தரமுணர்ந்துப்
பொது நிதியாம்
கலைகள் தமை விலையாக்கும்
காலத்தை மாற்றிவிட்டு,
நிலையான சமாதானம்
நில உலகில் நாம் காண்போம்.

18-12-56

உண்ணும் உணவு உடல் மட்டும் பாயும்
எண்ணும் எண்ணங்கள் எங்குமே பாயும்.

19-12-56

புக்ககம் போய் மக்கள் பெற்றும்
பிறந்த அகம் மறவாள் போல்,
சிக்கலுள்ள வாழ்க்கையிலும்
சிவன், சீவன், நிலை மறவேல்'

20-12-56

முற்கால வாழ்க்கையில் கண்ட அனுபவம்,
இக்காலத்தேவை நிகழ்ச்சிகள், சூழ்நிலை,
பிற்கால விளைவுகள் யூகித்துக் கடமைசெய்,
முக்காலம் கண்டமுனிவன் நீயே ஆங்கே.

21-12-56

அஞ்ஞானம் அறிவினது ஆரம்ப நிலையாகும்,
விஞ்ஞானமோ அறிவின் வேகநிலை,
மெஞ்ஞானம் அறிவதனின் பூரணமாம்,
இஞ்ஞானம் மூன்றும் இயற்கையின் எண்ண நிலை.

22-12-56

பறை ஒலியால் சங்கீதம்
பயனற்றுக் காண்பதைப் போல்,
குறை காண்போர் அறிவில் நற்
குணங்கள் பயனற்றிருக்கும்.

23-12-56

அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி
அறிவை அறிவால் அறியப்பழகுதல் யோகம்
அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி
அறிவை யறிந்தோர் அன்பின் அறமே ஞானம்.

24-12-56

இருப்பது நாம் புசிப்பதற்கே
என்பார்கள் பாமரர்கள்.
இருப்பதற்கே புசிக்கின்றோம்
என்பார் ஆராய்ச்சியுளோர்.
இருப்பதனால் புசிக்கின்றோம்
என்பார்கள் முடிவறிந்தோர்.
இருப்பது ஏன் ? புசிப்பது ஏன் ?
எனும் கேள்விக் கிவைபதில்கள்.

25-12-56

ஒன்றி புள்ளியாய் ஒடுங்கி நீ இரு,
அன்றி விரிந்திடில் ஆராய்ச்சியோடிரு,
நின்றிடு அகண்டாகார நிலையினில்,
வென்றிடுவாய் புலன் ஐந்தையும் வெற்றியே,

26-12-56

சித்தம் எனும் பெருநிதியாம்
சிறப் பறிந்தால் அவ்விடத்தே,
சத்தம் ஒளி சுவை மணங்கள்
தரம் தோற்றம் இவை காணும்,
நித்தியமும் அநித்தியமும்
ஒன்றென்ற அத்துவித,
தத்துவமும் தானுகி
தன்னிலை விளக்கம் உண்டாம்.

27-12-56

இல்லாததே இருந்தது இயம்பொணுத மௌனமாய்,
நில்லாததும் நின்றதும் நின்ற ஒன்றெழுந்ததால்,
பொல்லாததும் நல்லதும் புலன் விரிந்த பின்னரே,
கல்லாவிதம் கற்றனம் கருத்திஞல் கருத்துளே.

28-12-56

வந்ததுதான் போகுமேயல்லாது
வருமுன்னே இருந்த ஒன்று போவதுண்டோ ?
இந்த உண்மை எண்ணி எண்ணி உணர்ந்து
[கொண்டால்
எவருக்கும் எப்போதும் நஷ்டமேது ?

29-12-56

காரணம் அறியாமல் காரியம் செய்பவன் பக்தன்,
காரணம் என்னவென காணமுயற்சிப்போன் யோகி
காரணம் கூறமுடியா எல்லை கண்டவன் முத்தன்
காரணம் விளைவுகள் கண்டு செயலாற்றுவான் ஞானி.

30-12-56

எதனுலே உந்தனுக்கு
இன்ப வாழ்வு கிடைக்குமெனில்
விதவிதமாய் அலங்காரம்
வீண் பேச்சு இவையொழித்து
மிதமான உழைப்பு, உணவு
மேலான எண்ணம்,
நிதநிதமும் பழக்கத்தில்
நீ கொள்ள அது கிட்டும்,

31-12-56

எந்த ஜீவனுக்கும் அறிவிற்கும் உடலுக்கும்,
அந்த சமயத்தில் தேவையாய் பொருத்தமாய்,
வந்த அனுபோகம் இன்பமாம், பின் விளைவை
சிந்திக்க, தீங்கு அற்றது எனில் அது உயர்வுஆம்

1957

1-1-57

பிறர் விருப்பம் கூர்ந்துணர்ந்து
தன் விருப்பம் பயன் படுத்தல்,
அறம் என்றும், கடமை என்றும்,
அன்பு என்றும் அறிந்துகொண்டோம்.

2-1-57

நெற்றியில் உச்சியில் ஞாபகமாயிரு,
உற்றுற்று பார்த்திடு உன்னை உலகை பின்,
கற்றபடி நட, கருத்து விழிப்புடன்,
பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகிடும்.

3-1-57

உலகமே ஒரு பெரிய பழய பள்ளி,
ஒவ்வொருவருக்கும் தினம் புதியபாடம்,
பலகலைகள் கற்றோர்க்கும் பாமரர்க்கும்,
பகிர்ந்து தரும் இன்பதுன்பம் எனும் பரிசு.

4-1-57

தொடர்ந்துவரும் சமுதாய வாழ்வு எனும்
உடலினிலே தோற்றமாகி,
படர்ந்துவரும் செல்வநிலை சீர்கேடு
பலமுடைய நீடித்த வியாதியாகும்.
கடன் என்ற புண்ணாகி
வட்டி எனும் சீழ்பிடித்து புரையும் ஓடி
படமுடியா துயராய்ச்சு
பகுத்தறிவும், பொது உடமைக்
கொள்கையுமே (இந்நோய்க்கு) நல்மருந்தாம்

5-1-57

பணத்திற்கும் பண்புக்கும் நடக்கும் போட்டியால்
குணத்தில் மனிதர்கள் குறைந்தோ ராகின்றார்கள்
இன்பதுன்ப தோற்றமாற்றம் இயல்பாராய்ந் தறிந்
அன்பெனும் பேரூற்று அறிவிற் சுரந்திடும். [திடில்

6-1-57

வாழ்வுக்கு ஆதரவும்
வளமும் தரும் செயலை
தாழ் வெனக் கொள்ளுவது
தருக்காகும் — ஆழ்ந்தறிந்து
பிறருடைய நலம் காத்துத்
தான் நலத்தைப்பெறுகின்ற
திறமைதான் அறம் என்னும்
சிறந்தசெயல்.

8-1-57

எழுத்தறிவு தொழிலறிவு
இயற்கை தத்துவ அறிவு
ஒழுக்க பழக்கங்கள் இவை
உணர்த்தும் முறையே கல்வி. (இழுக்கின்றி)
இலவசமாய்க் கல்விதனை
எங்கெங்கும் பிறக்கின்ற
உலகக் குழந்தைக்கட்கு
ஊட்டும் முறை முதல் தேவை.

7-1-57

வாழ்வை வளப்படுத்தும்
வழக்க பழக்கங்கள் எனும்
ஒழுக்கங்கள் எல்லாம்
ஆழ்ந்த சிந்தனையாளர்
அன்பினால் உலகுக்கு
அளித்த பரிசு ஆகும்.

9-1-57

சீர் திருத்த நோக்குடையாய்
சிந்தனைசெய் ! புவிவாழ்வை
யார்திருத்தம் செய்துள்ளார்
இதுவரையில் ? — பார்திருந்த
ஆராய்ச்சி, நல்லொழுக்கம்,
அன்பு செயல், இவையன்றோ
வேராச்சு ? அதனால் நீ
விவேகமுடன் அவ்வழிச்செல்.

10-1-57

கவர்ச்சிதரும் அலங்காரம் யாருக்காக ?
காண்பவர்கள் நெஞ்சத்தில் என்ன தோன்றும் ?
கவர்ச்சியினாலடைய உள்ள பயன்தான் என்ன ?
கண்ணியமாம் உடை ஒழுக்கம் கடைப்பிடிப்போம்.

11-1-57

எண்ணமே ஒரு நாடக மன்றம் போல்
எண்ணமே அதில் எண்ணற்ற நடிகர்கள்.
எண்ணமே அதை பார்ப்போர் ரசிப்போராம்
எண்ணமே அதன் நிர்வாகி உடையவன்,

12-1-57

உணவுக்காகவும் வாழ்வின் வளத்திற்கும்
உழைக்கும் நோக்கம் குறைந்தது.
பணத்தை நோக்கியே பாடு படுவதால்
பகுத்தறிவுக் கொவ்வா விளைவுகள் கண்டுள்ளோம்.

13-1-57

புலனைந்தின் துணைகொண்டு
பூவுலகை அனுபவித்து
புலன் தொடர்பற்று ஆராயும்
புதுமையே ஆறும் அறிவாம்
புலன் கடந்த செயல் முடிவே
பூர்வ நிலை அறிவறிதல்
புலன்கடந்த அவ்விடத்தே
பொருந்தி வாழ்வான் ஞானி.

14-1-57

உலகக் குழந்தைகள்
எல்லோரும் ஓரினமாய்
இலர் உடையார் எனும் பேதம்
இல்லாமல் குருகுலத்தில்,
பலகலைகளைப் பயின்று
பண்பால் உலகைத்திருத்தி,
நலம் பெருக்கும் நன்னாளே
நாடனைத்தும் பொங்கும் நாள்.

15-1-57

மேகம் குளிர்ந்தால் மழையாகி
உலகுக்கு வாழ்வளிக்கும்
யூகம் உயர்ந்தால் மனித
இனவாழ்வை வளப்படுத்தும்
மேகம் பொழி மழையதிகரித்தால்
துன்பமும் தோன்றுதல் போல்
யூகம் முரணான வழிசென்றால்
பலவிதத்தும் துன்பம் உண்டாம்.

ஞான வள்ளல் பரஞ்சோதி மகான்

அவர்களால் எழுதப்பெற்ற

நான் — கடவுள்

என்ற

தத்துவ ஞான நூல் 5-ம் பதிப்பு

வெளி வந்துள்ளது.

●

விலை ரூபா 3.

●

கிடைக்குமிடம் :

உலக சமாதான ஆலயம்

299, திருவொற்றியூர் ஐரோடு,

மதராஸ்—21.

G. V. வேதாத்திரி அவர்களை

ஆசிரியராகக் கொண்டு

அன்பொளி

என்ற மாதப்பத்திரிகை

1957 மே மாதம் 1ந் தேதி வெளிவருகிறது.

சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம்,
ஆன்ம ஞானம் என்ற ஐந்து துறைகளையும்
இணைத்து மக்கள் வாழ்வைத்
தூய்மையாக்க வேண்டும்
என்ற பெரு நோக்
கத்துடன் வெளி
வருகிறது.

★

தனிப் பிரதி அணா 4. **வருட சந்தா ரூ. 3.**

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

* * *

விலாசம் :

அன்பொளி நிலையம்

கூடுவாஞ்சேரி. S.I.

JHANSI PRESS, MADRAS-21